# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

**(Accredited with 'A+" Grade by NAAC in the Third Cycle)**

**பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி - 620 024**

**முனைவர் சு. சீனிவாச ராகவன், M.A.,M.L.I.sc.,Ph.D.,**
தேர்வு நெறியாளர்(பொ)

அலுவலகம் : 0431-2407016
தொலைப்படி : 0431-2407044
மின்னஞ்சல் : coe@bdu.ac.in
வலைத்தளம் : w.w.w.bdu.ac.in

---

<u>ந.க. எண்.001/தே.நெ/ப.பி/2022 நாள் : 18.04.2022</u>

பெறுநர்

முதல்வர் / துறைத் தலைவர் அவர்கள்
பாரதிதாசன் பல்கலைக்கழக ஆளுகைக்குட்பட்ட
கல்லூரிகள் மற்றும் துறைகள்

அய்யா/அம்மையீர்

பொருள்: முப்பத்து எட்டாவது பட்டமளிப்பு விழா - 2022 பட்டம்/பட்டயச் சான்றிதழ் பெறுவதற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனுப்புதல் மற்றும் பட்டமளிப்புக் கட்டணத்தை இணையவழியாக செலுத்தக் (Online payment) கோருதல் - தொடர்பாக.

-----

பல்கலைக்கழக முப்பத்து எட்டாவது பட்டமளிப்பு விழா **ஜுன்** மாதம் நடைபெற உள்ளது. இந்தப் பட்டமளிப்பிற்கு *தங்கள் கல்லூரியில் பயின்று* ***Nov/Dec.2020*** *மற்றும்* ***April/May 2021-ல்*** *தேர்ச்சிப்* பெற்று பட்டம் பெறத் தகுதிப் பெற்ற மாணவ/மாணவிகளிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அதற்குண்டான கட்டணத்தினை இணைய வழியாக செலுத்தி (**Online payment under the heading – Bulk payment by affiliated Colleges)** e -ரசீதுடன் <u>13-05-2022</u> தேதிக்கு முன்னதாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி (Instructions) தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பட்டச்சான்றிதழ் கட்டணத்தை மாணவர்கள் வங்கி வரைவோலை (Demand Draft) அல்லது இணையதளம் வழியாக (Online Payment) தனித்தனியே செலுத்தி அவற்றை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைப்பது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.** மேலும் பட்டமளிப்பு விழா நடைபெறும் நாள் பற்றிய விபரக்கடிதம் பின்னர் அறிவிக்கப்படும். மேலும், குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் உடனடியாக பரிசீலிக்கப்பட இயலாது எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

த.பி.பா.

-2-

பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் தரத்தேர்வில் **(RANK EXAMINATIONS)** **முதல் தரம் (FIRST RANK)** பெறும் மாணாக்கர்களுக்கு பட்டமானது ஒவ்வோர் ஆண்டும் பட்டமளிப்பு விழாவில் நேரடியாக **(In-Person)** வழங்கப்படுவதால், தங்கள் கல்லூரியில் **முதல் தரம்** (**FIRST RANK**) பெற்ற மாணாக்கர்களின் பூர்த்தி செய்யப்பட்ட பட்டமளிப்பு விண்ணப்பங்களை கட்டணம் செலுத்திய இரசீது நகல் மற்றும் உரிய இணைப்புகளுடன் பட்டமளிப்புப் பிரிவில் **தனியாக வழங்குமாறு** கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கடிதம் கிடைக்கப் பெற்றமைக்கு உடன் ஒப்புகைக் கடிதம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**தேர்வு நெறியாளர்**(பொ)

**குறிப்பு:-** பட்டச் சான்றிதழுக்கான கட்டணத்தை தேர்வுக் கட்டணத்தோடு மாணவ / மாணவிகள் ஏற்கனவே செலுத்தியிருந்தால் மீண்டும் பட்டச் சான்றிதழுக்கான கட்டணம் செலுத்தத் தேவையில்லை. பூர்த்தி செய்த பட்டச்சான்றிதழ் விண்ணப்பங்கள், கட்டணம் செலுத்திய இரசீது நகல் மற்றும் உரிய இணைப்புகளுடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.